**TETMII-IIA/25**

Booklet Serial No. :

Don't write anything in this space

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி- II (ம) IIA பணிகள்) பதவிக்கான முதன்மைத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 08.02.2025 பி.ப.

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி- II (ம) IIA பணிகள்) பதவிக்கான முதன்மைத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 08.02.2025 பி.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா(மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC - SPECIMEN

Do not use this area

TNPSC SPECIMEN
Do not use this area

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்கும் நேரத்திற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

5. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

TNPSC - SPECIMEN



CONTACT: +91 99-40004-960

6. தேர்வர்கள் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

7. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், ‘அனுப்புநர்’, ‘பெறுநர்’ முகவரிகளில் ‘அ ஆ இ’ அல்லது ‘எக்ஸ் ஒய் இசட்’ போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

8. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

9. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

10. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

TNPSC - SPECIMEN

---

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 1 | சி.என். அண்ணாதுரை :<br><br>தமிழக மக்களால் அன்புடன் பேரறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி.என். அண்ணாதுரை, 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் தனது எம்.ஏ. பட்டத்தை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முடித்தார். இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் ஆவார். அண்ணா நீதிக் கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார். சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்ற தாக்கமே இவரை நீதிக்கட்சியில் இணைய வைத்தது.<br><br>இவர் சாதி மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் தன்னை நீதிக் கட்சியில் இணைத்துக் கொண்டார்.<br><br>அண்ணா ஒரு சிறந்த பேச்சாளர். அக்காலத்தில் புகழ்பெற்ற பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். நீதிக்கட்சியில் இணைந்த போது பெரியாரின் தலைமையின் கீழ் பணிபுரியும் பாக்கியம் கிடைத்தது. இவருக்கு சரியான பாதையைக் காட்டி சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடச் செய்தது. இதன் மூலம் சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் பணியைத் தொடங்கினார்.<br><br>தமிழ்மொழி மீது அதிக பற்று கொண்ட அண்ணா காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கெதிராக குரல் எழுப்பினார். நன்கு வளர்ச்சியடைந்த தமிழின் இடத்தை இந்தி ஒரு போதும் எடுத்துக் கொள்ள முடியாது என்று முழங்கினார். |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 2 | Importance of Road Safety :<br><br>Every day the newspapers report of accidents of road and mishaps occurring frequently. Road accidents are undesired events that lead to injury or death. These deaths and injuries result in significant social and economic costs. The problem does not lie with roads; it is our carelessness that results in such misfortune. The loss of life results in the loss of livelihood.<br><br>Our traffic is a heterogeneous mix of slow moving as well as high-speed vehicles which is the cause for the problems. |

TNPSC - SPECIMEN



CONTACT: +91 99-40004-960

## அலகு — 2

*குறிப்பு :* i) **கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 3 | மனித வாழ்வில் முக்கியமான காலம் இளமைப் பருவம் ஆகும். அக்காலத்தில் நம்வாழ்வு நெறிப்படுத்தப்பட்டால் ஆயுட்காலம் முழுவதும் மன அமைதியோடும்; நிறைவோடும் வாழலாம். இளமைப் பழக்கங்கள்தான் வாழ்வுக்கு வளம் சேர்க்கும். அதனால்தான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்கிறார்கள். இளமைப் பருவம்தான் நினைவாற்றல் மிக்க பருவம். துணிச்சல் நிறைந்த பருவம். இப்பருவத்தில் கற்ற கல்வி 'சிலையில் எழுத்து' எனப்படுகிறது. முதுமைப் பருவம் கற்றற்குரிய பருவமன்று. கல்வியைப் போலவே நற்பண்புகளும் ஒருவனிடம் இளமை முதற்கொண்டே அமைந்தால் அவன் சான்றோனாக வாழ்வான். வாய்மை, கொல்லாமை, கல்லாமை, ஊக்கமுடைமை போன்ற நற்பண்புகளை ஒருவன் தன் இளமைப் பருவத்தில் வளர்த்துக் கொண்டால் முதுமையில் சான்றோர்கள் பலராலும் பாராட்டப்படும் நிலையை அடைவான்.<br><br>காந்தியடிகள் இளமையில் தாய்க்குச் செய்து கொடுத்த சத்தியமே அவரை மகாத்மா ஆக்கியது. தெருவிளக்கடியில் கற்ற கல்வியே முத்துசாமி ஐயரைச் சிறந்த வழக்கறிஞராக்கியது. ஜார்ஜ் ஸ்பன்சரின் இளமை ஆராய்ச்சியே நீராவிப் பொறியைக் கண்டுபிடிக்கச் செய்தது. இவ்வாறு இளமைப் பருவத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தியவர்கள் பெருமையும் புகழும் அடைவார்கள். |

## அலகு — 3

*குறிப்பு :* i) **கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

ii) **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10)**

| | |
|---|---|
| Q.No. 4 | வனப்புமிகு தமிழகத்தை ஆண்ட வளமைமிகு மூவேந்தர்களைப் போலவே, குன்றாப் புகழ்கொண்டு, குறைவிலா நெஞ்சத்தோடு பல குறுநில மன்னர்களும் ஆட்சிபுரிந்தனர். பெருஞ்சித்திரனார், நத்தத்தனார் ஆகியோர் கடையெழு வள்ளல்களைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும்பொழுது அவர்கள் குறுநில மன்னர்களாகவே கூறப்படுகின்றனர்.<br><br>முல்லைக்குத் தேரீந்து எல்லையில்லா இன்பம் கொண்ட பறம்பு மலைப் பகுதியை ஆண்ட பாரியும், மங்காப் புகழ் கொண்ட மலையமான் நாடு, முள்ளூர்ப் பகுதிகளை ஆண்ட காரி, சிறப்புமிகு சென்னி மலைப் பகுதியினை ஆண்ட ஓரி, வனப்புமிகு கண்டீரமலைப் பகுதியை ஆண்ட நள்ளி, பார் போற்றும் பழனிமலைப் பகுதியை ஆண்டு, மயிலுக்குப் போர்வையீந்த பேகன், பொதியமலை ஆய். தகடூரை ஆண்டு ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்து அழியாப் புகழ்பெற்ற அதியமான் முதலானோராவர்.<br><br>வேளிர் குலத்து வேந்தனான பாரி பறம்பு மலையையும் அதனைச் சூழ்ந்த 300-க்கும் மேற்பட்ட ஊர்களையும் பெற்ற நாட்டை ஆண்டான். கடையெழு வள்ளல்களில் பெருமைப்படக் கூறப்படும் இவனே தலைசிறந்தவனாவான். |
| 1. | கடையெழு வள்ளல்களைக் குறுநில மன்னர்களாகக் குறிப்பிட்ட புலவர்கள் யார்? |
| 2. | கடையெழு வள்ளல்கள் பெயர்களைக் குறிப்பிடுக. |

TNPSC - SPECIMEN



CONTACT: +91 99-40004-960

| | |
|---|---|
| 3. | முல்லைக்குத் தேர் கொடுத்தவன் யார்? |
| 4. | நெல்லிக்கனியை ஔவை யாரிடமிருந்து பெற்றார்? |
| 5. | மயிலுக்குப் போர்வை ஈந்தவன் யார்? |

**அலகு — 4**

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.**

**ii)** **300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். (1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | நாளும் செய்தித்தாளில் விபத்து குறித்து படிக்கிறோம் – விபத்து இறப்பு, படுகாயம், சமூகப் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகிறது – கவனக்குறைவு விபத்துக்குக் காரணம் – அதிவேகம் முதல் காரணம் – மது குடித்தல், பின்தொடர்தல், போக்குவரத்து விதி மீறல்களும் காரணம் – ஐ.நா. சபை, உலக சுகாதார அமைப்பு – 2015 சாலை பாதுகாப்பு பிரகடனம் வெளியிடல் – இந்தியா கையெழுத்து – 10 ஆண்டுகளில் விபத்து குறைக்க உறுதி ஏற்றல். |

TNPSC - SPECIMEN

**அலகு — 5**

*குறிப்பு :* **i)** **திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.**

**ii)** **கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**

**iii)** **300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | 'மனிதனுக்கு கூடா ஒழுக்கமே கேடாகும்' என்பதனை வள்ளுவர் வழி நின்று விளக்குக. |
| | (ஆ) | திருவள்ளுவர் தரும் கால மேலாண்மைக் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. |
| | (இ) | விருந்தோம்பல் பண்பில் தலை சிறந்தவர்கள் தமிழர் என்பதை திருக்குறள் வழி நிறுவுக. |
| | (ஈ) | திருக்குறள் ஒப்புரவியல் குறிப்பிடும் மானுட அறப்பண்புகளை விரித்துரைக்கவும். |
| | (உ) | திருக்குறள் இறைமாட்சி இன்றைய அரசியலுக்கும் பொருத்தமானது என்பதை நிறுவுக. |

## அலகு — 6

*குறிப்பு :* i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | தமிழக அரசின் பள்ளிக் குழந்தைகளுக்கான காலைச் சிற்றுண்டி உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் ஆணை பிறப்பிக்கும் வகையில் கடிதம் அனுப்பக் கோருதல். |
| | (ஆ) | உனது ஊரில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. |
| | (இ) | தூய்மை மருத்துவமனை பிரச்சாரம் – 2022-24 திட்டத்தின் கீழ், 2022-23 ஆம் ஆண்டு பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 32.70 கோடிக்கான திட்ட மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்க. |

## அலகு — 7

*குறிப்பு :* i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | |
|---|---|
| Q.No. 8 | கீழ்க்காணும் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக. |
| | (1) இயற்கை |
| | (2) கல்வி |
| | (3) குலம் |
| | (4) அன்பு |
| Q.No. 9 | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க. |
| | (1) கன்னங்கரேல் |
| | (2) வம்பு தும்பு |
| | (3) எடக்கு மடக்கு |
| | (4) ஏறுக்கு மாறாக |

TNPSC - SPECIMEN

ADHIKAAR IAS

| Q.No. | |
|---|---|
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) குணங்களெல்லாம் |
| | (2) படுக்கையாகிறது |
| | (3) விழித்தெழும் |
| | (4) ஆனந்தவெள்ளம் |
| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
| | (1) கயிறு பாம்பாகுமா? |
| | (2) அவன் இனிமையாகப் பேசினான். |
| | (3) இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவனின் தமையன் ஆவார். |
| | (4) அவன் காற்று மாசுபாடு குறித்து விழிப்புணர்வு பெற்றான். |
| Q.No. 12 | **பிழை நீக்கி எழுதுக :** |
| | (1) கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கிறார். அவரை அலைத்து வாருங்கள் |
| | (2) ஊற்றமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார் |
| | (3) நேற்று என்னை சந்திப்பார். அவர் என் நண்பர் |
| | (4) பொது அறிவு நூல்களை தேடிப் படித்தார். போட்டி தேர்வில் வென்றார் |

TNPSC - SPECIMEN



CONTACT: +91 99-40004-960